# நாடளாவிய ரீதியில் அரச வைத்தியசாலைகளில் நாளை முதல் பணிப்புறக்கணிப்புப் போராட்டம்!

## மாகாண மட்டத்தில் செயற்படுத்தவும் முடிவு!

நாடளாவிய ரீதியில் அரச வைத்தியசாலைகளை உள்ளடக்கி மாகாண மட்டத்தில் அடையாள வேலை நிறுத்தம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் டொக்டர் ஹறித அலுத்கே இதனை தெரிவித்தார்.

24 மணித்தியால அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் நாளை ஆரம்பமாகவுள்ளதாக தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி, ஊவா மாகாணத்திலுள்ள அனைத்து அரச வைத்திய சாலைகளின் வைத்தியர்களும் நாளை வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

பின்னர் வடமாகாணத்தில் உள்ள அனைத்து பொது வைத்தியசாலைகளிலும் எதிர்வரும் 3ஆம் திகதியும், வடமேற்கு மாகாணத்தில் 6ஆம் திகதியும், சப்ரகமுவ மாகாணத்தில் 7ஆம் திகதியும் பணிப்புறக்கணிப்பு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மத்திய மாகாணம் மற்றும் கிழக்கு மாகாணத்தில் 8ஆம் திகதியும், தென் மாகாணம் மற்றும் வடமத்திய மாகாணத்தில் உள்ள அனைத்து அரச வைத்தியசாலைகளின் வைத்தியர்களும் எதிர்வரும் 9ஆம் திகதியும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

எதிர்வரும் 10ஆம் திகதி மேல்மாகாண அரச வைத்தியசாலைகளின் வைத்தியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க)

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 15 புதன்கிழமை 01.11.2023 கதிர் 104

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
Poo Aadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்

## பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படாதாம்!

டீசலின் விலை அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் தற்போது பஸ்பயணக்கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய அவசியமில்லை என்று பஸ் உரிமையாளர்கள் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இந்த விடயம் தொடர்பில் கருத்துரைத்த அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் அஞ்சன பிரியன்ஜித், மீண்டும் டீசல் விலை அதிகரிக்கப்படுமாயின் பஸ்கட்டணமும் உயர்த்தப்படும் என்று தெரிவித்தார். 2➤

## இந்திய நிதி அமைச்சரை வரவேற்றது இ.தொ.கா. வெளிவிவகார இராஜாங்க அமைச்சரும் பங்கேற்பு



இலங்கைக்கு இன்று வந்த இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வரவேற்றனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான், இ.தொ.காவின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், இ.தொ.காவின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் உள்ளிட்டோர் இதன்போது பங்கேற்றிருந்தனர். அத்துடன் வெளிவிவகார இராஜாங்க அமைச்சரும் கலந்துகொண்டிருந்தார்.

மலையக மக்களுக்கு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'நாம் 200' நிகழ்வு நாளை கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நடைபெறவுள்ளது. அமைச்சர் ஜீவன் தொண்டமானின் அழைப்பையேற்று இந்நிகழ்வில் இந்திய அரசின் பிரதிநிதியாகவே இந்திய நிதி அமைச்சர் பங்கேற்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக போராட்டம் கொழும்பின் பல பகுதிகளுக்குள் நுழையத் தடை!

மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக இன்று (01) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டப் பேரணி கொழும்பின் பல பகுதிகளுக்குள் நுழைய தடை விதித்து கோட்டை நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மின் கட்டண அதிகரிப்புக்கு எதிரான பேரணியில் பங்கேற்கும் உறுப்பினர்கள் ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், நிதியமைச்சு, கல்லுமுவதொர மற்றும் மின்சார அமைச்சுக்கு அண்மித்த பகுதிகளுக்குள் பிரவேசிக்க தடை விதித்து கோட்டை நீதவான் திலின கமகே உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஆர்ப்பாட்டங்கள் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்துவதுடன் அரச சொத்துக்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் சேதம் விளைவிக்கக் கூடும் என கோட்டை கொம்பனி வீதி பொலிஸ் நிலைய 2➤

## இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பாக மத்திய அமைச்சரிடம் முறையிடத் தீர்மானம்



யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகின்ற இந்திய மத்திய நிதி அமைச்சரைச் சந்தித்து அவருக்கு தாங்கள் எதிர்நோக்கும் அவலங்கள் தொடர்பில் விளக்கமளிக்க உள்ளதாக யாழ்ப்பாண கிராமிய கடற்றொழில் சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு 2➤

## காரை நகர் - யாழ் நகர் சென்று திரும்பும் பேருந்துச் சேவை மீண்டும் ஆரம்பமானது!

காரைநகரிலிருந்து பயணத்தைத் தொடங்கி யாழ்ப்பாணம் சென்று மீண்டும் மதியம் 1.20 இற்கு யாழ்ப்பாணத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்து காரைநகரை சென்றடையும் 785/1 பேருந்து சேவை இன்று ஆரம்பமானது

கடந்த காலங்களில் காரைநகர் - யாழ்ப்பாணம் பேருந்துச் சேவையின் ஒரு பகுதியாக காரைநகர்- மூளாய் பிள்ளையார் கோவிலடி - டச்சு வீதி ஊடாக சித்தன்கேணி யாழ்ப்பாணம் வீதி - வட்டுக்கோட்டைச் சந்தி - அராலி செட்டியார்மடம் ஊடாக யாழ்ப்பாணம் செல்லும் பேருந்து, 2➤



## கழுத்து, முகம் அழுத்தப்பட்டு தினேஷ் ஷாப்டர் படுகொலை

### கொழும்பு நீதிமன்றம் தீர்ப்பு

கழுத்து மற்றும் முகம் அழுத்தப்பட்டதன் காரணமாகவே பிரபல தொழிலதிபர் தினேஷ் ஷாப்டர் உயிரிழக்க நேர்ந்தது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. கொழும்பு நீதிவான் நீதிமன்றமே இன்று இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

இதன் மூலம் குற்றச் செயல் இடம்பெற்றுள்ளது என்று தீர்ப்பளித்த மேலதிக நீதிவான், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களப் பணிப்பாளருக்கு உத்தரவிட்டார்.

மரண விசாரணையின் போது 2➤

## "தமிழனை வெட்டுவேன்" - சர்ச்சைக்குரிய விவகாரம்:

# மன்னிப்புக் கோரினார் அம்பிட்டியே தேரர்!

தென்னிலங்கையிலுள்ள தமிழர்களை வெட்டுவேன் எனக்கூறிய சர்ச்சைக்குரிய கருத்துத் தொடர்பாக அம்பிட்டியே சுமணரத்தின தேரர் மன்னிப்புக் கோரியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக காணொளி ஒன்றினை வெளியிட்டு தனது கருத்தினை அவர் பதிவுசெய்துள்ளார்.

மட்டக்களப்பு, ஜயந்தபுரம் பகுதியில் அமைந்துள்ள மயானம் கடந்த 21 ஆம் திகதி தரைமட்டமாக்கப்பட்டது. அங்கு எனது தாயின் சமாதியும் உள்ளதால், பொலிஸாருடன் அந்தப் பகுதிக்குச் சென்று பார்வையிட்டேன்.

இதன்போது சிலர் என்னை தூண்டும் வகையில், காணொளிகளை எடுக்க ஆரம்பித்தமையால், நானும் கோபத்தில் சில கருத்துக்களை வெளியிட்டிருந்தேன்.

இதனை தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலர், தமிழ் மக்களை குழப்புவதற்காக பயன்படுத்தி வருகிறார்கள்.

நான் கூறிய கருத்துக்கள் இனவாதத்தைத் தூண்டும் கருத்துக்கள் என தமிழ் மக்களிடம் கூறிவருகிறார்கள்.

விசேடமாக, கூட்டமைப்பின் உறுப்பினர் இரா.சாணக்கியன், இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில், நான் ஒரு பைத்தியக்காரன் என்றும் எனது தாயின் சமாதி இங்கே இருக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதிலிருந்தே, சாணக்கியன்தான் இந்த மயானத்தை உடைக்கப் பணித்துள்ளார் என நான் தெரிந்துக் கொண்டுள்ளேன்.

அப்படி அவர் செய்யாவிட்டால், இந்தச் செயற்பாட்டை ஏன் அவர் சரியாகக் காண்பிக்க முற்பட வேண்டும்?

இதுதொடர்பாக நேற்று நீதிமன்றத்திற்கு சென்றபோது,



மயானத்தை தரைமட்டமாக்கிய தரப்பினர் குற்றத்தை ஒப்புக் கொண்டதோடு, மீண்டும் மயானத்தை அமைத்துத் தருவதாகவும் கூறியுள்ளனர்.

நானும், தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கோருவதாக நீதிமன்றத்திடம் அறிவித்தேன். நான் கவலையுடன்தான் அன்று அவ்வாறு பேசினேன்.

இது இனவாதக் கருத்துக் கிடையாது. தனி ஈழம் வரப் போவதாக தெரிவித்து, தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காகவே சில நபர்கள் இவற்றைப் பயன்படுத்துகிறார்கள்.

இதனை அனைத்து மக்களும் புரிந்து கொள்ள வேண்டும், என அவர் அதில் தெரிவித்துள்ளார்.

## சனத்தொகை மற்றும் வீடமைப்பு கணக்கெடுப்பு இன்று ஆரம்பம்

பத்து வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் சனத்தொகை மற்றும் வீடமைப்புக் கணக்கெடுப்பு ஜனாதிபதி செயலகத்தில் இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் பதிவு செய்யப்பட்ட முதல் கட்டிடமாக ஜனாதிபதி செயலகம் பட்டியலிடப்பட்டுள்ளது.

தரவு சேகரிப்புக்கு அச்சிடப்பட்ட ஆவணங்களுடன் டப்லெட்டுகளைப் பயன்படுத்துவதே இவ்வருட மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் முக்கிய அம்சமாகும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையில் இறுதியாக 2012 ஆம் ஆண்டு மக்கள் சனத்தொகை கணக்கிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (04)

## கழுத்து, முகம் அழுத்தப்பட்டு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் மற்றும் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஐவரடங்கிய நிபுணர் குழுவின் அறிக்கைகள் என்பனவற்றைப பரிசீலித்த கொழும்பு மேலதிக நீதிவான் திருமதி ரஜீந்திர ஜயசூரிய இந்தத் தீர்ப்பை அறிவித்தார். (அ)

## காரை நகர் - யாழ் நகர் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் ஏற்பட்ட கொரோனாப் பேரிடர், பொருளாதார நெருக்கடி மற்றும் ஏனைய சில காரணங்களால் தனது பயணத்தைத் தொடர்வதில் சிரமங்களை எதிர்கொண்டு தடைப்பட்டது.

இதனால் மக்கள் பல சிரமங்களை எதிர்கொண்டனர். மேலும் டச்சு வீதியின் சேதங்கள் காரணமாகவும் பஸ் போக்குவரத்தை செய்யமுடியாத நிலை பற்றியும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இந்த நிலையில், கடந்த வாரம் டச்சு வீதி புனரமைக்கப்பட்டதோடு பஸ் போக்குவரத்தினை முன்னெடுப்பதற்கான முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக, இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ் பிராந்திய நிலையத்துடனும் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டதன் பயனாக மீண்டும் இந்தப் பேருந்துச் சேவையை முன்னெடுக்க சாதகமான சமிஞ்சை கிடைத்ததால் மீண்டும் இன்று முதல் இச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பேருந்தின் நேர அட்டவணையைப் பின்பற்றி பயனாளிகள் பயன்பெற முடியும்

குறிப்பாக பாடசாலை மாணவர்கள், வைத்திய சாலை செல்வோர், யாழ்ப்பாணம் செல்வோர் ஆகியோருக்கு இது மிகவும் பயனுடையதாக இருக்கும் என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

மூளாய் டச்சு வீதி ஆரம்பம் முதல் சித்தன்கேணி டச்சு வீதி முடிவு வரையான வீதிப் பகுதியில் வாழும் மக்களின் போக்குவரத்து வசதியினை இலகுபடுத்துவதே இப்பேருந்து வழித்தடத்தின் பிரதான நோக்காகும் என்று தெரிவிக்கப்படுகிறது. (01)

## இந்திய மீனவர்களின் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகை தரவிருக் கின்ற இந்திய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை சந்தித்து இந் திய மீனவர்களினால் தமது வளங்கள் அழிக்கப்படுபவது தொடர்பில் விரிவாக விளக்கமளிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அதுமட்டுமன்றி, எதிர் வரும் காலங்களில் தமிழகத்திற்குச் சென்று தமிழக முதலமைச்சர் மற்றும் தமிழக மீனவர்ளுக்கும் தங்களுடைய அவலங்களை எடுத்துரைக்கவுள்ளதாக வும் அவர் தெரிவித்தார். (க)

## மின் கட்டண அதிகரிப்புக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணையாளர்கள் முன்வைத்த விடயங்களைக் கருத்திற்கொண்ட நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

அரசியல் சாசனத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள பேச்சுச் சுதந்திரம், ஒன்று கூடும் சுதந்திரம், நடமாடும் சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாக்க நீதிமன்றம் கடமைப்பட்டிருப்பதால், பேரணியில் கலந்துகொண்ட மக்களை அமைதியாகச் செயல்படுமாறு கூறிய நீதவான் நீதிமன்றம், அவர்கள் அவ்வாறு செய்யாவிட்டால், சட்ட விதிகளின்படி அவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறும் பொலிசாருக்கு அறிவுறுத்தியுள்ளது. (04)

## பஸ் கட்டணங்கள் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, டீசல் விலை அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட மாட்டாது என்று இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

பஸ் உரிமையாளர்களுக்கும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டுள்ள இணக்கப்பாட்டுக்கு அமைய பஸ் பயணக் கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றரின் விலை குறைக்கப்பட்டுள்ள போதிலும் பயணக் கட்டணத்தைக் குறைக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது என்று ஒட்டோ தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் எரிபொருள் விலைகள் திருத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் - பாரம்பரிய முறையிலான வாழ்க்கை - ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் - பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி - தியான மண்டபம் - மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் - உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் - பாரம்பரிய உணவகம் - பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் - யோகா நிலையம்
விருந்தினர் விடுதி - சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் - தாரா பண்ணை
பூங்கா - நடைபயிற்சிப் பாதை - உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி - விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

விற்பனையாளர் தேவை
**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

# கிளிநொச்சி மாவட்டப் பண்பாட்டுப் பெருவிழா!



வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களங்களின் அனுசரணையில், கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பேரவையும் மாவட்ட செயலகமும் இணைந்து நடாத்தும் பண்பாட்டுப் பெருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு, கிளிநொச்சி மாவட்ட திறன் விருத்தி நிலைய கலாசார மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரும், பண்பாட்டுப் பேரவைத் தலைவருமான றூபவதி கேதீஸ்வரன் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி விழாவில் யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக தொழிநுட்பப் பீடத்தின் பீடாதிபதி சிவமதி சிவச்சந்திரன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

மேலும், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி வடக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் ஆ.சிவனருள் ராஜா, கிளிநொச்சி தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன், வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் லாகினி நிருபராஜ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக கலாபூஷணம் வ.ஏழுமலைப்பிள்ளை (கரைச்சி), கலாபூஷணம் ம.கறுப்பையா (பச்சிலைப்பள்ளி), கலைநகரி காசிப்பிள்ளை குலசேகரம் (பூநகரி), கலாபூஷணம் ந. சிவபாலசுப்பிரமணியம் (கண்டாவளை), எழுத்தாளர் ரதிதேவி கந்தசாமி (தாமரைச் செல்வி), எழுத்தாளர் சி.கருணாகரன், எழுத்தாளர் கலாபூஷணம் சி.தமயந்தி (தமிழ்க்கவி), எழுத்தாளர் பா. பார்த்தீபன் (தீபச்செல்வன்) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில், முன்னைய மாவட்டச் செயலக வளாகத்திலிருந்து விழா மண்டபம் வரை மாவட்ட செயலக உத்தியோகத்தர்களின் தமிழ் இன்னிய அணியுடன் விருந்தினர்கள் வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து அமரர் கலைக்கிளி செல்வி நடனவதி முருகேசு அரங்கில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

அமரர் கலைக்கிளி செல்வி நடனவதி முருகேசுவின் பெயரில் அமைந்த அரங்கின் திறப்புரையைக் கண்டாவளைபிரதேசகலைஞர் கவிஞர் அ.கேதீஸ்வரன் நிகழ்த்துவார்.

விழாவில் கலைஞர்களுக்கான கலைக்கிளி, இளங்கலைஞர் விருதுகள் வழங்கலும் பாடசாலை மாணவர்கள், பிரதேசக் கலைஞர்களின் பல்வேறு கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (02)

# ஈ.கல்வி அமைப்பினது செயற்பாடுகள் பட்டிருப்பு வலயத்தில் அங்குரார்ப்பணம்



(வி.ரி. சகாதேவராஜா)

ஈ.கல்வி அமைப்பின் செயற்பாடுகள் பட்டிருப்பு வலயத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளன.

இதற்கென e- kalvi Charity Fund Inc அமைப்பின் செயலாளர் இளங்கோ வினாசித்தம்பி பட்டிருப்பு வலயக்கல்வி பணிமனைக்கு நேற்று முன்தினம் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

அவர் பட்டிருப்பு வலயக்கல்வி பணிமனையை மையமாகக் கொண்டு இயங்கும் இ-கல்வியின் சூம் வகுப்புகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வானது பட்டிருப்பு வலயக்கல்வி பணிப்பாளர் எஸ்.சிறீதரன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் இ-கல்வி அமைப்பின் இலங்கைக்கான இணைப்பாளரும் ஹோலிக்குறோஸ் மகாவித்தியாலயத்தின் அதிபருமான அருட்சகோதரி சிறிய புஸ்பமும் இணைந்திருந்தார். வலயத்தின் அதிபர்கள் அனைவரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின்போது பட்டிருப்பு வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ்.சிறீதரன், இ- கல்வி அமைப்பின் செயலாளரால் கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து கல்வி உத்தியோகத்தர்களுடன் செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சிக்கு துணை செய்யும் ஆடுயீனோ பற்றி கல்வித் திணைக்களத்துடன் இணைந்து எவ்வாறு ஆசிரியர்களுக்கு எவ்வாறு பயிற்சி அளிக்க முடியும் என ஆராயப்பட்டது. மாணவர்களை புதிய கண்டுபிடிப்புகளை நோக்கி வழி நடாத்த தொழிநுட்பம் எவ்வளவு அவசியம் எனவும் கலந்துரையாடப்பட்டது.

மேலும் தரம் 5, 10, 11 மாணவர்களின் சூம் வகுப்புகள், மாதிரிப் பரீட்சை பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

e- kalvi Charity Fund Inc என்பது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர்கள், விரிவுரையாளர்களினால் அவுஸ்திரேலியாவில் ஆரம்பிக்கப்பட்டு இலங்கையில் அதிகஷ்ட பிரதேச, வளங்கள் குறைந்த பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குக் கைகொடுத்து வரும் ஒரு பதிவு செய்யப்பட்ட அமைப்பாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவின் மாற்றுத் திறனாளி சங்கத்தின் கூட்டம்

## ஆரோக்கிய உணவுக் கலந்துரையாடலும் இடம்பெற்றது



(ஹஸ்பர்)

திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவின் தம்பலகாமம் மருதம் மாற்றுத் திறனாளி சங்கத்தின் மாதாந்தக் கூட்டமும், உள ஆரோக்கிய உணவுப் பழக்க வழக்கம் தொடர்பான கலந்துரையாடலும் கடந்த திங்கட்கிழமை புதுக்குடியிருப்பு கிராம சேவகர் கட்டிடத்தில் இடம்பெற்றன.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ. ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கு இணங்க இடம்பெற்ற இந்நிகழ்வில் கப்பல்துறை ஆயுர்வேத தள வைத்தியசாலையின் வைத்தியர்கள் வளவாளர்களாக் கலந்து கொண்டனர். அங்கு மாற்றுத் திறனாளிகளுக்கான சித்த ஆயுர் வேத மருத்துவ முறைகள், ஆரோக்கியமான உடல் உள சுகாதாரம் தொடர்பிலும் விழிப்புணர்வூட்டப்பட்டது.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் ப.சுதன், மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் த.பிரணவன் உட்பட பெற்றோர், சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



# உக்ரைனில் ஒரே குடும்பத்தினர் 9 பேர் கொலை 2 ரஷ்ய வீரர்கள் கைது செய்யப்பட்டதாக தகவல்



உக்ரைனில், ரஷ்யாவின் பிடியிலுள்ள நகரில் 2 குழந்தைகள் உட்பட உறங்கிக் கொண்டிருந்த ஒரே குடும்பத்தின் 9 பேர் கொல்லப்பட்ட அதிர்ச்சிச் சம்பவம் நடந்துள்ளது.

உக்ரைனுக்கு எதிராக ரஷ்யா கடந்த 2022 ஆம் ஆண்டு பெப்ரவரியில் படையெடுத்தது. இதற்கு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்தன. எனினும், போரானது தொடர்ந்து ஒன்றரை ஆண்டுகளாக நீடித்து வருகிறது.

இந்தப் போரில், உக்ரைனின் கிழக்கே வோல்நோவாகா நகரை ரஷ்யா கைப்பற்றியுள்ளது. அந்நகரம், கடந்த 2022 ஆம் ஆண்டு மார்ச்சில் இருந்து ரஷ்யாவின் பிடியிலேயே உள்ளது.

இந்தச் சூழலில், உக்ரைனின் டோனெட்ஸ்க் பகுதியின் வழக்கறிஞர்கள் அலுவலகம் சில புகைப்படங்களை வெளியிட்டுள்ளது. அவற்றில், படுக்கைகளில் பலர் சுடப்பட்டுக் கிடக்கின்றனர். ஒரே குடும்பத்தின் உறுப்பினர்களான அவர்கள் ஒருவரையொருவர் கட்டிப்பிடித்தபடி காணப்பட்டனர். சுவர்களில் ரத்தக்கறைகள் படிந்து காணப்பட்டன.

இந்தச் சம்பவத்தில், ரஷ்யாவின் ஆக்கிரமிப்புப் படைகள் அவர்களைப் படுகொலை செய்துள்ளன, என உக்ரைன் உறுதிப்படுத்தி உள்ளது. இந்த விவகாரத்தில் ரஷ்ய வீரர்கள் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என ரஷ்ய அதிகாரிகளும் கூறியுள்ளனர்.

ராணுவச் சீருடையில் ஆயுதங்களுடன் வந்த சிலர், அந்தக் குடும்பத்தினரை குறித்த இடத்திலிருந்து வெளியேறிச் சென்றுவிடும்படி ஒக்டோபர் மாதத் தொடக்கத்தில் மிரட்டியுள்ளனர். ஆனால், வீட்டு உரிமையாளர் அதற்கு மறுத்து விட்டார்.

இதனால், அந்தக் குடும்பத்தினரை அவர்கள் மிரட்டி, தாக்கிக் கொன்றுவிட்டுத் தப்பிச் சென்றனர் என உக்ரைனின் டோனெட்ஸ்க் பகுதியின் வழக்கறிஞர்கள் அலுவலகம் வெளியிட்ட முதல்கட்ட தகவல் தெரிவிக்கின்றது.

இந்தச் சம்பவம் உலகளவில் அதிர்வலைகளை ஏற்படுத்திருக்கிறது. (04)

# இஸ்ரேலின் பெயரை நீக்கிய சீனாவின் பிரபல நிறுவனங்கள்



சீனாவின் முன்னணி தொழிநுட்ப நிறுவனங்களான அலிபாபா மற்றும் பைடு ஆகியன தங்களின் இணைய வரைபடத்தில் இருந்து இஸ்ரேலின் பெயரை நீக்கியுள்ளன.

பாலஸ்தீனத்திற்கு ஆதரவான சீனாவின் நிலைப்பாட்டை ஆதரிக்கும் வகையில், இந்தச் சீன நிறுவனங்கள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருக்கலாம் எனத் தெரிகிறது.

சீனாவின் சமூக ஊடகங்களில் யூத எதிர்ப்பு வலுவாகப் பேசப்பட்டு வருகிறது. ஜெர்மனி, யூதர்களுக்கு என்ன செய்ததோ அதையே இஸ்ரேல் பாலஸ்தீனத்திற்குச் செய்து வருகிறது என கருத்துக்கள் வெளியாகின்றன.

இருப்பினும், பைடுவின் சீன மொழியில் உள்ள இணைய வரைபடத்தில் சர்வதேச நிர்ணயிக்கப்பட்ட அளவீடுகளின்படி இஸ்ரேலின் எல்லைகள் குறிக்கப்பட்டிருந்தாலும் அந்தப் பகுதியில் இஸ்ரேல் என்கிற பெயர் குறிப்பிடப்படவில்லை.

லக்ஸம்பெர்க் உள்ளிட்ட சிறிய பகுதிகளுக்கே தெளிவான பெயர்க் குறிப்பு இருக்கும்போது இஸ்ரேல் என்ற பெயர் இல்லை என்பது இஸ்ரேல் - பாலஸ்தீனப் போரின் விளைவாகத்தான் என்பதை அறிய முடிகிறது.

இது குறித்து அலிபாபா மற்றும் பைடு நிறுவனங்கள் இதுவரை எந்த உத்தியோக பூர்வ தகவலையும் வெளியிடவில்லை. (04)

# ஹமாஸின் பணயக் கைதியான தமது இராணுவ வீராங்கனையை மீட்டதாக இஸ்ரேல் அறிவிப்பு



காஸா பகுதிக்குள் இஸ்ரேல் ராணுவம் மேற்கொண்டு வரும் தரைவழித் தாக்குதலில் பிணைக்கைதியாக ஹமாஸால் பிடித்துச் செல்லப்பட்ட இஸ்ரேலைச் சேர்ந்த இராணுவ வீராங்கனை ஒருவரை மீட்டுள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

திங்கட்கிழமை (ஒக்.30) இஸ்ரேல் ராணுவம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், கடந்த இரவில் ஓரி மெக்டிஷ் என்பவர் எமது ராணுவம் மேற்கொண்ட தரைவழித் தாக்குதலின்போது மீட்கப்பட்டுள்ளார். இவர் ஒக்டோபர் 7 தாக்குதலில் பிணைக்கைதியாக ஹமாஸால் கடத்திச் செல்லப்பட்டிருந்தார். ஓரிக்கு மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அவர் நலமுடன் உள்ளார். தற்போது குடும்பத்தினரைச் சந்தித்தார், எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட வீராங்கனை தனது குடும்பத்துடன் இருக்கும் புகைப்படத்தை இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு வெளியிட்டுள்ளார்.

கடந்த சில நாள்களாக இஸ்ரேல் ராணுவம் காஸா பகுதிக்குள் தரை வழியாக ஊடுருவி வருகிறது. இஸ்ரேலியர்கள், வெளிநாட்டவர்கள் உள்பட 230 பேர் பிணைக் கைதிகளாக ஹமாஸின் பிடியில் உள்ளனர்.

ஒக்டோபர் 7 தாக்குதலில் கடத்திச் செல்லப்பட்ட இவர்களில் நான்கு பேரை ஹமாஸ், கட்டார் அரசின் சமரசப் பேச்சுவார்த்தையால் விடுவித்தது. இந்த நிலையில், தமது ராணுவத்தின் தரைவழி நடவடிக்கையால் வீராங்கனை ஒருவர் மீட்கப்பட்டுள்ளார் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது. ஆயினும், இதனை ஹமாஸ் குழு மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)



# சிலியில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

தென்னமெரிக்க நாடான சிலியில் நேற்று செவ்வாய்க்கிழமை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

உள்ளூர் நேரப்படி காலை 9.33 க்கு ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், ரிச்டர் அளவுகோலில் 6.6 அலகுகளாகப் பதிவானது.

அடகாமா பிராந்தியத்தில், ஹுவாஸ்கோ நகருக்கு 42 கிலோ மீற்றர் தென்மேற்கே 35 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது.

எனினும், இந்த நிலநடுக்கத்தால் உயிர்ச் சேதமோ, பொருள் சேதமோ ஏற்பட்டதாக உடனடித் தகவல் எதுவும் வெளியாகியிருக்கவில்லை. (04)

# இஸ்ரேல் - ஹமாஸ் தொடரும் கடும் யுத்தம் ஐ.நா. மனித உரிமை இயக்குநர் ராஜினாமா



ஐக்கிய நாடுகள் மனித உரிமை அமைப்பின் இயக்குநர் கிரேக் மொகிபர் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே கடந்த 24 நாள்களாக கடுமையான போர் நடைபெற்று வருகின்றது. இஸ்ரேலுக்குள் ஊடுருவித் தாக்குதல் நடத்திய ஹமாஸை அடியோடு அழிக்க இஸ்ரேல் சூளுரைத்துள்ளது.

அதற்காக, காஸா மீது தொடர்ந்து வான்வழித் தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேல், தரைவழித் தாக்குதலையும் தொடங்கியுள்ளது. இந்தப் போரில் இதுவரை 8,500 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் இயக்குநர் கிரேக், தனது ராஜினாமாக் கடிதத்தை உயர் ஆணையரிடம் வழங்கியுள்ளார்.

அவரின் கடிதத்தில், காஸாவை முற்றுகையிட்டுத் தாக்குதல் நடத்தும் விவகாரத்தில் ஐ.நா. சபை மற்றும் மேற்கத்திய நாடுகளின் அணுகுமுறை குறித்து அதிருப்தி தெரிவித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. (04)

# கல்முனைப் பிராந்தியத்துக்கான மருத்துவ ஆய்வுகூடம் திறந்துவைப்பு



(எம்.ஏ.ஏ.அக்தார்)

கல்முனை பிராந்தியத்துக்கான மருத்துவ ஆய்வுகூடம் பாலமுனை பிரதேச வைத்தியசாலை கட்டிடத் தொகுதிக்குள் திங்கட்கிழமை (30) உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையில் இடம்பெற்ற இத்திறப்பு விழா நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் பிரதம அதிதியாகவும், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் மெலிண்டன் கொஸ்தா கௌரவ அதிதியாகவும், முன்னாள் பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளரும், நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான டொக்டர் எம்.பீ.அப்துல் வாஜித் விசேட அதிதியாகவும் கலந்துகொண்டு ஆய்வுகூடத்தினை திறந்து வைத்தனர்.

இந்நிகழ்வில் பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம்.மாஹிர், உயிரியல் மருத்துவ பொறியியலாளர் இப்ஹாம், பாலமுனை பிரதேச வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஜே.நௌபல், கல்முனை சுகாதார சேவைகள் பணிமனையின் பிரிவுத் தலைவர்கள், வைத்தியர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

மிகவும் குறைந்தளவிலான நிதியினைக்கொண்டும் பிராந்திய சுகாதார நிறுவனங்களில் உள்ள வளங்களைக் கொண்டும் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த பிராந்திய ஆய்வுகூடத்தில் பிராந்திய வைத்தியசாலை களில் எடுக்கப்படுகின்ற நோயாளர்களின் குருதி மற்றும் மாதிரிகள் பரிசோதனை செய்யப்படவுள்ளதுடன், விசேட பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இங்கு மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளின் முடிவு அறிக்கைகள் உரிய நேரத்துக்குள் சம்மந்தப்பட்டவர்களுக்கு Online (email, whatsapp) மற்றும் குறுஞ்செய்தி ஊடாகவும் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அரச நிதி செலவீனங்களை குறைத்து, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் முன்னெடுக்கப்பட்ட குறித்த வேலைத்திட்டம் சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகளினதும் வரவேற்பினைப் பெற்றுள்ளதுடன் அதனை செயற்படுத்துவதற்கான அங்கீகாரமும் கிடைத்துள்ளமை விசேட அம்சமாகும்.

இலங்கையில் முதலாவது பிராந்திய ஆய்வுகூடத்தினை கல்முனை பிராந்தியத்திலே திறந்து வைத்ததன் மூலம் தேசிய ரீதியில் கல்முனை சுகாதார சேவைகள் பணிமனை முக்கியத்துவம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொலநறுவை மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த 66,000 மீன் குஞ்சுகளை கிருத்தலை குளத்தில் இடும் நிகழ்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பொலநறுவை மாவட்டத்தின் பாரிய குளங்களில் ஒன்றான கிருத்தலை குளத்தில் 66,000 மீன் குஞ்சுகளை இடும் நிகழ்வு வட மத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத்தின் பணிப்புரையின் பேரில் இடம்பெற்றது.

பிரதேச மக்களின் போசணை மற்றும் மீனவர்களின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்கில் வட மத்திய மாகாண விவசாய,கால்நடை உற்பத்தி மற்றும் மீன்பிடி அமைச்சினால் இத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது.

எமது நாட்டுக்கு பெருமளவில் உணவு வழங்கும் விவசாய மக்கள் வாழும் பொலநறுவ மாவட்டத்தில் இவ்வாறான குளங்களில் மீன் குஞ்சுகளை விடுவதனால் மீனவர்களின் பொருளாதாரத்தை விருத்தி செய்யவும், எதிர்காலத்தில் குளங்களடங்கிய உற்பத்திகளை அதிகரிப்பதுடன், அதனுடன் இணைந்த தொழில் வாய்ப்பினையும் ஏற்படுத்த முடியும்.

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் மாகாண சபை என்ற ரீதியில் ஒதுக்கப்படும் நிதியினை சரியான முறையில் பயன்படுத்துவது அரச அதிகாரிகளின் பொறுப்பாகும், என்பதற்கிணங்க இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.



இந்நிகழ்வில் திணைக்கள தலைவர்கள், மீனவ சமூகங்களின் பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## தம்பலகாமம் பிரதேச செயலகத்தின் மூன்றாம் காலாண்டுக் கணக்காய்வு



(ஹஸ்பர்)

தம்பலகாமம் பிரதேச செயலகத்தின் 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டுக்கான கணக்காய்வு முகாமைத்துவ குழு கூட்டம் நேற்று, பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம்பெற்றது.

இதில் மாவட்ட பிரதம உள்ளக கணக்காய்வாளர் ஏ.எல்.மஹ்ரூப், கணக்காய்வு அத்தியட்சகர் வை.எம். நிஸார் கலந்து கொண்டு கூட்டத்தை வழி நடாத்தினர்.

இதன்போது உதவி பிரதேச செயலாளர் இரா. பிரசாந்தன், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், கணக்காளர் செல்வதாஸ், பிரதேச செயலக உள்ளக கணக்காய்வாளர் ஈ.ஜி.டி.றொசான், கிளைத் தலைவர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## ‘எழுகை’ செயலமர்வு



(எம்.எப்.நவாஸ்)

திருக்கோவில் பிராந்திய கலை – இலக்கியவாதிகளின் ஆற்றலை மேம்படுத்தும் நோக்கில் கிழக்கு பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஏற்பாடு செய்த “எழுகை“ செயலமர்வு அண்மையில் காஞ்சிரங்குடா கால்நடை வைத்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பயிற்சி மண்டபத்தில் நடைபெற்றது .

திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் ச.நவநீதனின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வை, சிரேஷ்ட கலாசார அலுவலர் வி .குணபாலா நெறிப்படுத்தியிருந்தார்.



# படுகொலை செய்யப்பட்ட யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய முன்னாள் தலைவரின் நினைவு தினம் அனுஷ்டிப்பு





படுகொலை செய்யப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றிய முன்னாள் தலைவர் புருசோத்தமனின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்றைய தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவராக இருந்த செல்லத்துரை புருசோத்தமன் கடந்த 2008.11.01 அன்று சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார்.

படுகொலை செய்யப்பட்ட புருசோத்தமனின் நினைவு தினம் இன்றைய தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சுற்றுவட்டத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது மாணவர்கள் சுடரேற்றி மலர் அஞ்சலி செலுத்தினர். (02)

## கிழக்கில் 486 புதிய அதிபர்களுக்கான நியமன கடிதம் வழங்கிவைக்கும் நிகழ்வு ஒத்திவைப்பு!

(வி.ரி. சகாதேவராஜா)

இலங்கை அதிபர் சேவை தரம் மூன்றுக்கு நியமனம் பெற்ற கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 486 புதிய அதிபர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார் அறிவித்துள்ளார்.

இந்த நிகழ்வு, எதிர்வரும் நான்காம் திகதி சனிக்கிழமை திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் நடைபெறவிருந்தது.

தவிர்க்க முடியாத காரணத்தினால் இந்த நிகழ்வு எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை அதே இடத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, புதிய அதிபர்கள் அன்று காலை 7 மணிக்கு மண்டபத்திற்குள் வந்து சேருமாறு பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஜி.திசாநாயக்கா தலைமையில் நடைபெற உள்ள இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்து கொண்டு நியமனக் கடிதங்களை வழங்கி வைக்கவிருக்கிறார்.

## கிளிநொச்சியைச் சேர்ந்த நபர் வவுனியாவில் கஞ்சாவுடன் கைது

வவுனியா பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய கிளிநொச்சிப் பகுதியில் இருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றில் வவுனியா நோக்கிப் பயணித்த ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

வீதிச் சோதனையின்போது சந்தேக நபரிடமிருந்து இரண்டு கிலோ கேரளா கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். அந்த நபரை வவுனியா நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிசார் தெரிவித்துள்ளனர். (2)

## கிளிநொச்சி மாவட்டத்தில் உணவுப் பாதுகாப்பு வாழ்வாதார உதவித் திட்டக் கலந்துரையாடல்!

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின் கீழ், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்துடன் இணைந்து செயற்படுத்தப்படும் உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார உதவித்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.றூபவதி கேதீஸ்வரன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற குறித்த கலந்துரையாடலின்போது, மாவட்ட அரசாங்க அதிபர் கிளிநொச்சி மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பாக எடுத்துக் கூறியிருந்தார்.

திட்டம் தொடர்பான அறிமுகத்தினைத் தொடர்ந்து, துறை சார்ந்த திணைக்கள அதிகாரிகளுடன் திட்ட உள்ளடக்கங்கள் தொடர்பாகக் கலந்தாலோசிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர்(காணி), திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட விவசாய பணிப்பாளர், உதவிப் பிரதேச செயலாளர்கள், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், உள்ளிட்ட துறை சார்ந்த பல திணைக்கள அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (02)



# கொழும்பு எரிபொருள் நிலையங்களில் பரிசோதனை பல இலட்சம் ரூபா எரிபொருள் மோசடியின் எதிரொலி




இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான பிலியந்தலை கூட்டுறவு எரிபொருள் நிரப்பு நிலையத்தின் பிரதான கணிப்புக் கருவியை மாற்றி பல இலட்சம் ரூபா பெறுமதியான எரிபொருள் மோசடி இடம்பெற்றுள்ளமை தெரியவந்ததையடுத்து, கொழும்பு மாவட்டத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் விசேட சோதனைகளை மேற்கொள்ள கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் உள்ள பிரதான கணிப்புக் கருவிகளை யார் வேண்டுமானாலும் மாற்றக் கூடிய நிலையில் இருப்பதாலேயே எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மோசடிகள் இடம்பெற்று வருவதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பிலியந்தலை கூட்டுறவு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் நிரப்புபவர் மற்றும் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் மின்சார ஊழியர் ஒருவரும் இணைந்தே இந்த பெரும் மோசடியை செய்துள்ளதாகவும், இவ்வாறு ஏனைய எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் எரிபொருள் மோசடி இடம்பெறலாம் என விசாரணைகளை மேற்கொண்ட பெற்றோலிய கூட்டுத்தாபன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையம் தொடர்பாக கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்த தகவலின் பேரில் சிறப்பு புலனாய்வு அதிகாரிகள் சோதனை நடத்தி ஆய்வு செய்தனர். எரிபொருள் நிரப்பு நிலையத்தின் பிரதான கணிப்புக் கருவியை மாற்றி வேறொரு கணிப்புக் கருவியை இணைத்தே இந்த மோசடி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த மோசடியில் ஈடுபட்ட பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் மின்சார ஊழியர் மற்றும் எரிபொருள் நிரப்புபவர் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், கூட்டுறவு எரிபொருள் நிலைய நிர்வாகம் தற்காலிகமாக பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதன்படி, உடனடியாக அமுலுக்கு வரும் வகையில், கொழும்பு மாவட்டத்தில் உள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களையும் விசேட சோதனைக்கு உட்படுத்தப்படுத்துவதற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஏற்பாடுகளைச் செய்துள்ளதாக தெரிய வருகின்றது. (ரெந-01)

# அரசியல் விஐபிக்களுக்கான அம்பியூலன்ஸ் சேவையிலிருந்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இன்று முதல் வெளியேறும்




அரசியல் பெரும்புள்ளிகளுக்கு அவசர மருத்துவ சேவை வழங்குவதற்காக சேவையிலீடுபடும் நடமாடும் அம்பியூலன்ஸ் சேவையில் இருந்து இன்று (01) முதல் விலகிக்கொள்வதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

நாட்டைவிட்டு வெளியேறும் மருத்துவர்களை அவ்வாறு வெளியேறாமல் தக்கவைகுமாரும் அதற்கு மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் தொடர்பாகவும் அரசாங்கத்திற்கு தமது சங்கம் சமர்ப்பித்திருந்த ஆலோசனைகளுக்கு இதுவரை சாதகமான பதில் கிடைக்காமையின் காரணமாகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் டொக்டர் சமில் விஜேசிங்ஹ நேற்று (31) தெரிவித்திருந்தார்.

அரசியல் பிரமுகர்களின் சுகாதார மற்றும் மருத்துவ நடவடிக்கைகளில் இருந்து விலகுவதுடன், அரசியல்வாதிகளால் ஏற்பாடு செய்யப்படும் நடமாடும் சுகாதார கிளினிக்குகளில் இருந்தும் தமது சங்கம் விலகுவதாகவும், இது தொடர்பில் சுகாதார அமைச்சுக்கு அறிவித்து மேலதிக தொழில்சார் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சுகாதார கட்டமைப்பிலிருந்து மருத்துவர்கள் வெளியேறுவதால் ஏற்படும் இறுதி விளைவுகளுக்கு சுகாதார அமைச்சும் அரசாங்கமும் பொறுப்பேற்க வேண்டும் எனவும் டொக்டர் சமில் விஜேசிங்ஹ மேலும் தெரிவித்தார். (ரெந-02)

# சீன மொழி நிலையத்தை அமைக்கும் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி!

சர்வதேச ஒத்துழைப்பு, கல்வித்துறை ஒத்துழைப்பு, கலாசார இடைச் செயற்பாடுகள் மற்றும் நட்புறவை ஊக்குவித்தல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டு உயர்கல்வி ஒத்துழைப்புக்களுக்காக சீனாவின் ஷங்காய் திறந்த பல்கலைக்கழகம் மற்றும் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகங்களுக்கு இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்ள ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஒத்துழைப்புப் பிரிவின் கீழ் சீன மொழி நிலையமொன்றை இலங்கையில் அமைப்பதற்கு இலங்கை திறந்த பல்கலைக்கழகம், ஷங்காய் திறந்த பல்கலைக்கழகம் மற்றும் வரையறுக்கப்பட்ட சீனா வங்கிக்கும் இடையிலான முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு குறித்த தரப்பினர்கள் உடன்பாடு தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய, ஐந்து வருடங்களுக்குச் செல்லுபடியாகும் வகையில் குறித்த ஒப்பந்தங்களில் கையொப்பமிடு வதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (04)

# உல்லாசப் பிரயாணிகளால் நிரம்பியது பொத்துவில் அறுகம்பே பிரதேசம்





(எம்.ஏ.றமீஸ்)

பொத்துவில் அறுகம்பே பிரதேசத்திற்கு பெருந் தொகையான உல்லாசப் பயணிகள் வருகை தர ஆரம்பித்துள்ளனர். தற்கால சூழ்நிலையில் வெளிநாட்டு, உள்நாட்டு உல்லாசப் பயணிகள் தமது பொழுதினைக் கழிப்பதற்காக இப்பிரதேசத்திற்கு படை எடுத்து வருகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் உள்ள சில கடற்கரைப் பகுதிகள் சர்வதேச அரங்கில் தனக்கென தனியோர் இடத்தினைப் பெற்றிருக்கின்றன.

அந்த வகையில், அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள அறுகம்பே கடற்கரைப் பிரதேசம் பல்வேறு சிறப்பம்சங்களை தன்னகத்தே கொண்டுள்ளதால் தினமும் இப்பிரதேசத்திற்கு ஆயிரக்கணக்கானோர் தமது பொழுதினைப் போக்கு வதற்காக வருகை தருகின்றனர்.

அசாதாரண சூழ்நிலை காரணமாக வெகுவாக பாதிக்கப்பட்டிருந்த இப்பிரதேச சுற்றுலாத்துறை தற்போது மீளெழுச்சி பெற்று வருவதனால் இப்பிரதேசத்தின் துறைசார்ந்த மக்களின் வாழ்வாதார விருத்தி ஏற்பட்டு வருவதுடன் வர்த்தக பொருளாதார ரீதியிலான மேம்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் இப்பிரதேசத்தில் முகாமிட்டு சில நாட்கள் தங்கியிருந்து இப்பிரதேசத்தின் அழகினை இரசிப்பதனால் இங்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தக நிலையங்கள் பல்வேறானவை அமையப் பெற்றுள்ளன. இதனால் பெருந்தொகை அந்நியச் செலாவணி நாட்டுக்கு வருமானமாய் கிட்டி வருகின்றன.

இங்கு வருகை தருபவர்களின் பாதுகாப்பினை உறுதிப் படுத்துவதற்காகவும் கடலலை விளையாட்டில் ஈடுபடுபவர்களையும் பாதுகாப்பதற்கென அரச பாதுகாப்புப் படையினரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் வருகையினைப் போல் உள்ளூர் சுற்றுலாப் பயணிகளும் இப்பகுதிக்கு விருப்புடன் வருகை தருகின்றனர்.

இக்கடற்கரைப் பிரதேசம் உலகரங்கில் மிகப் பிரபல்யம் பெறுவதற்கு சர்வதேச அளவில் இக்கடற்பரப்பில் நீரலைச் சறுக்கு விளையாட்டுப் போட்டிகள் வருடந்தோறும் இப்பிரதேசத்தில் நடைபெற்று வருகின்றன.

சர்வதேச ரீதியிலான நீரலைச் சறுக்கு விளையாட்டு இக்கடற்பரப்பில் வருடந்தோறும் இடம்பெறுவதனால் பல நூற்றுக்கணக்கான வெளிநாட்டு போட்டியாளர்களும் அவர்களோடு இணைந்ததாக பல நூற்றுக்கணக்கான பார்வையாளர்களும் இப்பிராந்தியத்திற்கு வருகை தருவது இலங்கை நாட்டுக்கு அந்நியச் செலாவணியினை பெருமளவில் ஈட்டிக் கொள்வதற்கு வழிகோலியாகவும் அமைகின்றது.


JRIDE
BEYOND THE ROAD
ONLINE TAXI APP
FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குருசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.11.2023இல் வெளியிடப்பெற்றது.